1973 மார்ச் 29]

ஆண்டி ஓடை நீர்த்தேக்கத் திட்டம்

* 564 வினா—திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தைச் சேர்ந்த கல்லகம் கிராமம், ஆண்டி ஓடை நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மதிப்பீடு தற்போது மேற்பார்வைப் பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : துணைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டு இந்தத் திட்டம் இடையில் நின்றுவிட்டது. திரும்பவும் இதற்கு 1971-ம் ஆண்டுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுமார் 21 லட்சம் ரூபாய் மதிப்பீடுடைய இந்தத் திட்டத்தை இவ்வாண்டு நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நான் ஏற்கனவே சொல்லியதுபோல இது மேற்பார்வைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. தலைமைப் பொறியாளர் பரிசிலித்து, ரெவின்யூ போர்டுக்கு வந்து, அரசாங்கத்திற்கு வந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

தேனீ வளர்ப்புக்கான உதவி

* 565 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனீ வளர்ப்புக்கு அரசு அளித்துவரும் உதவிகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கிராமியக்கலை, கைவினை, தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்புப் பிரிவுகளை நடத்த அரசு நிதியுதவி அளிக்கிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தேனீ வளர்ப்பதற்கும், அறிவியல் முறையில் தேன் எடுப்பதற்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மலைச் சாதியினர் ஆகியோருக்கு அரிசன நலத் திட்டத்தின்கீழ் அரசு பயிற்சியளிக்கிறது.